சுருக்கம்

தொழில்நுட்பக் கல்வி – பொறியியல் கல்லூரியில் மாணவர் சேர்க்கையில் சிறப்பு இடஒதுக்கீட்டு இடங்களாக முன்னாள் இராணுவத்தினரின் பிள்ளைகளுக்கான இட ஒதுக்கீடு மற்றும் விளையாட்டு வீரர்களுக்கான இட ஒதுக்கீடு உயர்த்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

உயர்கல்வி (ஜே1) துறை

அரசாணை (நிலை) எண்.145 நாள்: 10.5.2008.

சித்திரை 28,
திருவள்ளுவர் ஆண்டு 2039.

படிக்கப்பட்டவை:

1) அரசாணை (நிலை) எண்.198, உயர்கல்வித்துறை, நாள் 30.5.2003.
2) தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கடித எண்.49930/ECA1/முன்னாள் இராணுவத்தினர்/2003–1, நாள் 10.12.2007 மற்றும் 6.3.2008.

-----

ஆணை

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் பொறியியல் கல்லூரிகளில் உடல் ஊனமுற்றோருக்கு 3 விழுக்காடும், மிகச்சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு 42 இடங்களும், சுதந்திர போராட்ட வீரர்களின் பிள்ளைகளுக்கு 10 இடங்களும் முன்னாள் இராணுவத்தினரின் பிள்ளைகளுக்கு 81 இடங்களும் சிறப்பு இட ஒதுக்கீடாக வழங்கப்படுகிறது.

2. முன்னாள் படைவீரர் நல இயக்கக கூடுதல் இயக்குநர், முன்னாள் இராணுவ வீரர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதற்கேற்ப அவர்களின் பிள்ளைகளுக்கான இட ஒதுக்கீட்டினை 81 இடங்களிலிருந்து 150 இடங்களாக உயர்த்தி தருமாறு கேட்டுக் கொண்டுள்ளார் என தெரிவித்து, அன்னார் கோரியுள்ளவாறு முன்னாள் இராணுவத்தினரின் பிள்ளைகளுக்கான இட ஒதுக்கீட்டினை 81 இடங்களிலிருந்து 150 இடங்களாக உயர்த்தி ஆணை வழங்குமாறும், பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிட்டுள்ள ஏனைய மூன்று பிரிவினரில் உடல் ஊனமுற்றோருக்கான இட ஒதுக்கீட்டையும், சுதந்திரப்போராட்ட வீரர்களின் பிள்ளைகளுக்கான இட ஒதுக்கீட்டையும் உயர்த்த தேவையில்லை என்றும், அரசு/அரசு உதவிபெறும் மற்றும் சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையில் விளையாட்டு வீரர்களுக்கான இட ஒதுக்கீட்டை 30 இடங்களிலிருந்து 128 இடங்களாக உயர்த்தி ஆணை வழங்குமாறும் தொழில்நுட்பக் கல்வி ஆணையர் பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கருத்துருவை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்பது என்று முடிவு செய்து கீழ்க்காணும் ஆணைகளை வெளியிடுகிறது:-

(1) அரசாணை (நிலை) எண்.198, உயர்கல்வித்துறை, நாள் 30.5.2003–ல் குறிப்பிடப்பட்டுள்ள உடல் ஊனமுற்றோர் மற்றும் சுதந்திர போராட்ட வீரர்களுக்கான இட ஒதுக்கீடு ஆகியவற்றில் மாற்றம் செய்ய வேண்டியதில்லை;

(2) விளையாட்டு வீரர்களுக்கான இட ஒதுக்கீட்டினை 30 இடங்களிலிருந்து 128 இடங்களாக உயர்த்துவதற்கு பதிலாக, அண்ணா பல்கலைக்கழகங்களுக்கான ஒதுக்கீடாகிய 12 இடங்களையும் சேர்ந்து 42 இடங்களிலிருந்து 100 இடங்களாக உயர்த்தப்படுகிறது; அதில் 88 இடங்கள் அரசு/அரசு உதவிபெறும் மற்றும் சுயநிதி பொறியியற் கல்லூரிகளுக்கும் ஏனைய 12 இடங்கள் அண்ணா பல்கலைக்கழக கல்லூரிகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது;

(3) முன்னாள் இராணுவத்தினருக்கான இட ஒதுக்கீட்டினை 81 இடங்களிலிருந்து 150 இடங்களாக (அண்ணா பல்கலைக்கழகம்–8 இடங்கள், அரசு/அரசு உதவிபெறும் பொறியியல் கல்லூரிகள்–34 இடங்கள், சுயநிதி பொறியியல் கல்லூரிகள்–108 இடங்கள்) உயர்த்தப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.கணேசன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25.
கூடுதல் இயக்குநர், முன்னாள் படைவீரர் நல இயக்ககம், 22, இராஜா முத்தையா சாலை, சென்னை–3.
உறுப்பினர்–செயலாளர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சென்னை–84.
பதிவாளர், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை/திருச்சிராப்பள்ளி/ கோயம்புத்தூர்/திருநெல்வேலி.
பொது (முன்னாள் இராணுவத்தினர்) துறை, சென்னை–9.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை, சென்னை–9.
வேளாண்மைத்துறை, சென்னை–9.
சட்டத்துறை, சென்னை–9.
கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை, சென்னை–9.
உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
இ.கோ./உதிரிகள்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.